REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 120

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு, ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி 15உ சனி (31—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 16உ ஞாயிறு (1—11—53)

'தனிப் பகுதி அமைத்துக் கொள்ள அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது'

—(:)—

'அதைசாதிக்கசட்டமுறைகளைத்தான் கையாள வேண்டும்'

— (:) —

'நானும்கூடத்தான் கருப்புக் கொடி காட்டினேன்'

'கருப்புக்கொடி காட்டுகிறவர்களுக்கும் பூரண சுதந்திரமுண்டு'

கவர்னர் பிரகாசாவின் அறிவுரையும்—அச்சுறுத்தலும்!

நாகை, அக். 31—

"தனிப்பகுதி அமைத்துக்கொள்ள விரும்பினுல் செய்யலாம்; ஆனுல், அவ்வாறு செய்யுமுன், நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியை நம்பி வாழாமல், தனியாக, சுயேச்சையாக இயங்கும்படியான ரீதியில் அமைக்க முடியுமா என்பதை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். இதற்கு அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனுல், அதை சாதிக்க, சட்டபூர்வமான முறைகளைத்தான் கையாள வேண்டும். தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை, சிந்தித்துப் பார்த்து, செயலில் இறங்க வேண்டும்."

"இப்போது கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்கிறவர்களும், மற்றவர்களின் உதவியின்றி, தங்கள் விவகாரங்களைத் தாங்களே நிர்வகிக்க முடியுமென்று நம்பினுல், அவ்வாறு செய்ய அவர்களுக்குப் பூரண சுதந்திரமுண்டு."

"அரசியல் போராட்ட காலத்தில் நானும்கூடத்தான் கருப்புக் கொடி காட்டினேன். அந்நிய ஆட்சியை விரட்டி, சுதந்திரம் பெற்று, நம் நாட்டை நாமே நிர்வகிக்க வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்தேன்."

"கிளர்ச்சிக்காரர்கள் மீது தனிப்பட்ட ரீதியில் எனக்குக் கோபமில்லை. தனிப்பட்ட ரீதியில் என்னை அவர்களுக்குப் பிடித்தாலும் பிடிக்கலாம்."

—இவ்வாறு சென்னை கவர்னர் பிரகாசா, நாகப்பட்டணம் நகர சபை அவருக்கு அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஒரு முக்கியமான செய்தியை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்நிய ஆட்சி அகன்றுவிட்டது; ஐக்கிய தேசத்தை அவர்கள் நம்மிடம் விட்டுச் சென்றுர்கள். அந்த ஐக்கியத் தன்மையைக் காப்பாற்றி நிலைநிறுத்துவது நம் கடமை."

"நாட்டை, மத நம்பிக்கையின் அடிப்படையில் இல்லாமல், வாழ்விடத்தை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கும் பிளவு சக்திகள் தலைதூக்குவதைக் காண்கிறோம். வடநாடு, தென்னுடு என்று பிரித்துப் பேசுகிறுர்கள். நாடு பூராவும் ஒன்றே; ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்குமிடையே தடைபோட முடியாது."

"தென்னுட்டிலுள்ள இந்த இயக்கம், ஒரு நிலையால்தான் நடத்தப்படுகிறது என எனது நண்பர்கள் கூறுகிறுர்கள். இந்த இயக்கம், இங்கு பலமாக இருக்கிறது. இதை நடத்துபவர்கள் கேட்பார் பேச்சைக் கேட்டு தவருன வழியில்செல்வதாகவும் நண்பர்கள் கூறுகின்றனர். நான் அப்படி நினைக்கவில்லை. கண்ணுல் கண்டதை தவறு என்று யாராவது கருத முடியுமா? ஆனுல், பிறரின் உதவியை அவர்கள் நாட ஆரம்பித்தால், சுதந்திரம் பறிபோய்விடும்."

"இந்த இயக்கத்தை அலட்சியம் செய்து சும்மாயிருந்தால் தீங்கு பரவிவிடும். தஞ்சை மாவட்டத்தில் இந்த இயக்கம் பலம் பெற்றிருக்கிறது. இது, என் சுற்றுப்பயணத்தில் கடைசிக் கூட்டமாகையால், என் உள்ளத்திலுள்ள எண்ணங்களை பட்டவர்த்தனமாக வெளியிட இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்கிறேன்."

"நான் மாநிலத் தலைவர் என்பதற்காகத்தான், அவர்கள் கிளர்ச்சி செய்கிறுர்கள். இந்த இயக்கத்தை அலட்சியம் செய்ய வேண்டாம். அப்படிச் செய்தால், அது வளரும்; திடீரென சங்கடம் ஏற்படும்."

(ச. மி.)

ஜார்ஜியா பாராளுமன்றத் தலைவர் 'டிஸ்மிஸ்'

ஜார்ஜியா சோவியத் பார்லிமெண்ட், தன் தலைவரை நீக்கிவிட்டு, உடனே புதுத் தலைவரைத் தேர்ந்தெடுத்துவிட்டதாக மாஸ்கோ பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

சர்க்காரில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள பல மாறுதல்களை பார்லிமெண்ட் ஊர்ஜிதம் செய்தது.

பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்த சர். அலெக்சாண்டர் பிளீமிங், நிமோனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டு பென்சிலினுலேயே குணப்படுத்தப்பட்டிருக்கிறுர்.

'நம் தமிழர்கள்தான் அடித்துக் கொள்கின்றனர்'

"குத்து, கொலை முதலியவைகளை நாமே நடத்திக்கொள்வதில் பயன் ஏதும் இல்லை"

'ஜாதிவேறுபாடுகளை வேரோடு களைய வேண்டும்'

காமராஜரின் கருத்தும் கண்ணும் திறக்கிறது

தர்மபுரி, அக். 31—

"கல்லக்குடி—டால்மியாபுர கிளர்ச்சி, மதுரையில் கத்திக்குத்து இவைகளினுல், நம் தமிழர்கள்தான் அடித்துக் கொள்ளுகின்றனர். குத்து, கொலை முதலியவைகளை நமக்குள் நாமே நடத்திக் கொண்டிருப்பதில் பயன் ஏதும் இல்லை."

—இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் காமராசர் நேற்று தர்மபுரி பொதுக்கூட்டத்தில் கூறினர்.

மேலும் அவர் பேசியதாவது:

"ஜாதி வேறுபாடுகளை வேரோடு அழிக்க வேண்டும். இவை இருக்கும்வரை, அரசாங்கம் எதுவாக இருந்தாலும் ஆட்சியை சரிவர நடத்த முடியாது."

"திராவிடநாடு பிரிந்து, அதன் முக்கியத் தலைவர்கள் மந்திரிகளாக வந்தாலும், ஜாதி வேறுபாடு ஒழிந்தால்தான் நாட்டில் சரிவர அமைதியை உண்டாக்க முடியும்."

"மொழிவாரி மாகாணம் ஏற்படுவது அவசியந்தான்; ஆனுல், ஜாதிப்பித்து முதலில் ஒழிந்தால்தான் நாட்டில் சுபிட்சம் ஏற்படும்."

—'ச. மி.'

பழிவாங்கும் இயல்பு கூடுகிறது

திருச்சியில் தி.மு. கழக தோழர்கள் அறுவர் கைது

திருச்சி, அக். 30—

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் திருச்சி வருகையை முன்னிட்டு, நேற்றிரவு 12-30 மணிக்கு, திருச்சி மலைக்கோட்டை தி. மு. கழக தோழர்களான டி. எம். ரத்தினம், எம். நாகராசன், சொ. கிருஷ்ணமூர்த்தி, டி. ஏ. கமலன், ர. கிருஷ்ணமூர்த்தி, கி. நாராயணன் ஆகிய அறுவரும் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி நகர தி. மு. கழகச் செயற் குழுவில், திருச்சி வரும் ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டுவதில்லை என முடிவு [illegible]ப்பட்டு, ஏற்கனவே நகர் முழுதும் செய்தி பரவியி[illegible]ருந்தது.

பம்பாய் பிரதமருக்கு நாட்டு வெடி குண்டு

சோஷலிஸ்டு கட்சி காரியாலய தாழ்வாரத்தில் கிடந்தது

அகமதாபாத், அக். 29—

இவ்வூரில் உள்ள சோஷலிஸ்டு கட்சி காரியாலயத்தின் வெளித் தாழ்வாரத்தில் ஒரு மரப்பெட்டியில் இரண்டு நாட்டு வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் காணப்பட்ட ஒரு கடிதத்தில், 'பார்டி சத்யாகிரகத்தைத் தோல்வியுறச் செய்ததற்காக' என்று பம்பாய் பிரதமர் மொரார்ஜி தேசாயுக்கு ஒரு குண்டும், போலீஸ் மாவட்ட தலைமை அதிகாரிக்கு ஒரு குண்டு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைக் கண்டு, சோஷலிஸ்டு கட்சியால் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தொழிலாளர் சங்க செயலாளரான தோழர் பி. மஞ்சுரி, போலீசுக்குத் தகவல் கொடுத்துள்ளார். குண்டுகள் பழுதாக உள்ளன.

பம்பாயில் போலி பாக்டரி

பம்பாய், அக். 30—

போலி டீரோமைசின், குளோரோமைசிடின் மருந்துகளைத் தயாரிக்கும் ஒரு பாக்டரியை பம்பாய் போலீஸ் நேற்றிரவு பம்பாயில் கண்டுபிடித்தனர். பல இடங்களில் பரிசோதனை போட்ட பின்பே இது சம்பந்தமான பொருள்களும், போலி பாக்டரியை நடத்[illegible]

ஐவர் சிறையில் இன்று 61-வது நாள்

★★✡★★✡★★✡★★✡★★✡★★✡★★

நம் நாடு

திமுகழக நாளிதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 31—10—1953 சனி

வாழ்விலோர் கிழமை!

நவம்பர் முதல் தேதி தொடங்கி, ஒரு வாரம் வரை, 'தூத்துக்குடி வாரம்' நடத்த வேண்டும் என்று, நமது தி. மு. கழகத் தலைமை நிலைய பொறுப்பாளர் அறிவித்திருக்கிறார். அந்தக் கிழமையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் விளக்கிக் கூறியுள்ளார். அது, இதழின் மற்றோர் இடத்தில் காணக்கிடக்கிறது.

இது, நமது கழகத் தோழர்களுக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பு. நமது கனிவையும், கடமைப் பாட்டையும் ஆளவந்தார்களுக்கு உணர்த்த, நமது தோழர்களுக்குத் தலைமை நிலையம் கொடுத்த நல்லதோர் தருணம்.

கழகத்தின் அடிப்படையான அமைதியைக் கடைப்பிடித்து ஒழுகும் நமது கழகத் தோழர்களின் செயல் திறத்தை ஆச்சாரியார் சர்க்காருக்கு விளக்கிக் காட்ட, தலைமை நிலையம் தோழர்களுக்குக் கொடுத்துள்ள சிறந்ததோர் சந்தர்ப்பம். இதை, நழுவவிடாமல், தலைமை நிலைய அறிக்கையில் குறித்துள்ளபடி, கட்டுப்பாடான முறையில் நமது தோழர்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

நமது அறப் போராட்டத்தின் ஆற்றலை, ஆச்சாரியார் சர்க்கார் கண்டாகிவிட்டது. நமது கழகத் தோழர்களின் தியாக உள்ளத்தை அமைச்சர் சந்தேகத்திற்கிடம் துளியுமின்றி விளக்கமாகத் தெரிந்துகொண்டார்கள். நமது கழகத்தின் பரவலான வளர்ச்சியும், பொதுமக்களிடம் கலந்து நிற்கும் நிலையும் கவர்னர் பிரகாசா அவர்களின் சிந்தனையையும், சிரத்தையையும் கிளறிவிட்டு இருக்கிறது.

இது கண்டு அச்சம் கொள்பவர், அறியாமை மிக்கவர். நாம் அஞ்சுவதும் இல்லை; அஞ்ச வருவதுவும் இல்லை. மறுமலர்ச்சி கனியும் தாமரையின் செடியருகில் போக நாம் பயப்படவேண்டுமா? 'அமைதி—அமைதி' இதுவே நமது கழகத்தின் செயல்களுக்கெல்லாம் உயிர் நாடி. சிறந்த,

அடக்குமுறையைவிட நாம் ஆளவந்தார்களிடம் எதை எதிர்பார்க்க முடியும்? அன்புரையையா, அருள் கனிந்த தழுவலையா? அவர்கள் தான், அதிகார பீடத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறார்களே! யானைமீது அம்பாரியிட்டுச் செல்லுபவரிடமா சுண்ணாம்பு கேட்க முடியும்? அரசியல் அரிச்சுவடி அறியாதவர்கள் அல்லவோ, அந்த சிறிய செயல்களை எல்லாம், இந்தப் பெரிய மனிதர்களிடம் எதிர்பார்ப்பர்?

தூத்துக்குடி தோழர்கள் விசாரணை இல்லாமலே காவலில் தள்ளப்பட்டுள்ளனர். அரசியல் சட்டத்திலே தரப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் உரிமைப் பட்டியல் என்னமோ பகட்டாகத்தான் இருக்கும்! படிக்கும் பொழுது என்னமோ இனிப்பாகத்தான் இருக்கும். செயல்களுக்கு! வியாதத்திற்குக் கூட கணக்கில் அடங்கும் மின்னல் ஒளி போலத்தான் மின்னும்! அது, அவ்வளவும் உலகத்தார் பார்வைக்குக் காட்டப்பட்டுள்ள படாடோபப் பட்டியல்! உள் நாட்டாருக்கு, அது எதுவும், காலத்துக்கேற்ற ஊர்ப்பொழுதும் பயனளிக்காது!

அந்த உரிமைப் பட்டயத்தைச் செயல்பட விடாமல் தடுக்க, வெள்ளையன் விட்டுச் சென்ற சட்ட ஏடுகள் நடைமுறையில் கோர திருவிளையாடல் புரியும். மக்களின் உரிமைப் பட்டயம் தீட்டிய திவ்விய சொரூபிகளின் திக்கணுக்கும் கருத்துக்கும் இந்த உண்மை விளக்கமாகத் தெரியும். வேண்டுமென்றுதானே இந்தத் விபரீத பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்? இதற்கு யாரை நோவது? நாட்டுக் குடிமக்களின் விழிப்பற்ற நோக்கத்தைத்தான் நொந்துகொள்ள வேண்டும்! அதனாலும் விளையும் பயன், பூஜ்ஜியம்தான்! புது கணக்குப் போடவேண்டிய பொறுப்பும் கடமையும் இனி நமக்குத்தான்!

தூத்துக்குடி தோழர்கள்மீது பயங்கரமான குற்றங்களை சுமத்தியுள்ளது, அறிந்தோ அறியாமலோ ஆச்சாரியார் சர்க்கார். தூத்துக்குடி தோழர்கள், சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலே இருந்துகொண்டு, நெஞ்சுரம் குன்றாமல், இடர்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது உள்ளம் உருக்கு இரும்பு உள்ளம். அவர்கள் உடல் வெளிறிப் போய்க் கிடந்தாலும், முகம் மட்டும் ஆர்வத்தின் அறிகுறியாகத்தான், நெஞ்சுரத்தைப் பிரதிபலித்துக் காட்டிக்கொண்டு இருக்கிறது.

அவர்கள் சேரன் பரம்பரை; பாண்டியன் வழித் தோன்றல்; சோழன் சந்ததி; நம்மைப் போல.

தூத்துக்குடியில்தான் கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்தச் சிதம்பரனார், சிப்பியேந்திய தியாகி, பிறந்தார், வாழ்ந்தார், வீழ்ந்தார் என்ற தியாக வரலாற்றை, கசடறக் கற்றிருப்பவர்களல்லவா தூத்துக்குடி தோழர்கள்? அந்த வீர மண்ணின் காதல் இவர்கள் பண்பில் இல்லாமல் எங்கு மறைந்தொழியும்? கடுகு சிறுத்ததால் காரம் போய்விட்டதாகக் கதையுண்டா? பெருந்தியாகி சிதம்பரனாரின் வீரச் சுடரை அணையவிடாமல் பாதுகாத்து நிற்பவர்கள், நமது தூத்துக்குடி தோழர்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

"எண்மை மீட்க லட்சக் கணக்கில் திராவிடப் பெருங்குடியினர் உண்டு; அவர் அன்பையும், அனுதாபத்தையும் ஒன்று திரட்டி செயல்படுத்த தி. மு. கழகம் மேருபோல் உண்டு; எத்தனை இன்னல் வந்து எம்மைத் தீண்டினாலும் எமது மனஉறுதியைக் குலைக்க விடாது; இடர் நீங்கி சுடர் விட்டுப் பிரகாசிக்கும் செயல் புரியும் சுதந்திர புருஷர்களாக நாங்கள் வெளிவருவோம்" என்று, தூத்துக்குடி சிங்கங்கள் கொண்டுள்ள திடமான நம்பிக்கைதான், அவர்களிடம் காணக் கிடக்கும் உறுதியில் மறைந்து கிடக்கும் மகத்தான இரகசியம்.

அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்கு ஆட்டம் ஏற்படாத வகையில், நாம், நமது கடமையைச் செய்தாக வேண்டும். கடமை இன்னது என்பதை தலைமை நிலையப் பொறுப்பாளர் அறிக்கை விளக்குகிறது. அதன்படி தூத்துக்குடி வாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்றித் தரவேண்டும், நாடெங்கும் பரவி உள்ள தி. மு. கழகத் தோழர்கள்.

'அந்தப் பேச்சாளர் இல்லாமல் கூட்டம் நடத்தக் கூடாது! இந்தப் பேச்சாளர் ஒப்புதல் கொடுக்காததால் கூட்டத்தைத் தள்ளி வைத்தோம்,' என்ற, கடமையை நிறைவேற்றத் தவறிய பேச்சு, எங்கிருந்தும் எழக்கூடாது; முணுமுணுப்பும் கிளம்பக் கூடாது.

வெறியூட்டும் பேச்சுக்கள், எப்பொழுதும்போல இப்பொழுதும் அறவே கூடாது. ஆளவந்தார்களின் அடாத செயல்களை அலசிக் காட்டும்பொழுது, என்றும்போல், பேச்சில், இன்றும் கண்ணியம் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சதி வழக்கு பிறந்த கதையைக் கூறுங்கள்; ஆனால், வழக்கு வரலாற்றுக்குள் நுழைந்து புதிய தொல்லைக்கு அச்சாரம் கொடுக்காதீர்கள். இதைக் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது முக்கியத்திலும் முக்கியம்.

அறிக்கையில் கண்டுள்ளபடி, வழக்கை வாபஸ் பெற்று, தோழர்களை விடுதலை செய்யுமாறு தீர்மானம் நிறைவேற்றி, நமது சமுதாயத்தை இத்தொல்லைக்குள்ளாக்கிய முதலமைச்சர் ஆச்சாரியாருக்கு, ஒரு வினாடியும் தாமதிக்காமல் அனுப்பிவையுங்கள்.

அந்த வழக்கு விஷயத்திலும், தோழர்கள் விடுபடும் விஷயத்திலும், திராவிடப் பெருங்குடி மக்கள் கொண்டுள்ள அக்கறையையும், ஆர்வத்தையும் அமைச்சர் ஆச்சாரியார் உடனடியாக அறியச் செய்யுங்கள். ஆயிரம் ஆயிரம் கையெழுத்துக்கள், அவருக்கு அனுப்பும் ஒவ்வொரு அறிக்கையிலும் இருக்க முயலுங்கள்.

இது மட்டும் போதாது! மேலும் உங்கள் உழைப்பும், உதவியும் தேவைப்படுகிறது, தூத்துக்குடி தோழர்கள் மீது பூசப்பட்டுள்ள மாசு போக்க.

இந்த வாரத்தில் குறைந்தது 2000 ரூபாயாவது, வழக்கு நிதிக்குக் கிடைத்தது என்ற திருப்தி இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் இது முக்கியம். உடனே செய்யுங்கள். நமது உடலில் ஒரு உறுப்பு புண்பட்டிருந்தால், நமது கண், நீர் சொரிவது போலவே, தூத்துக்குடி தோழர்கள் வழக்கு விஷயத்திலும், விடுதலை விஷயத்திலும் நமது கண், ரத்தக் கண்ணீர் சொரிந்தாக வேண்டும்.

தூத்துக்குடி தோழர்கள் தங்கள் கடமையைச் செய்து விட்டார்கள். அவர்களுக்கான நமது கடமையை ஒழுங்காகச் செய்து, இலட்சிய வெற்றி பெறுவோம், வாரீர், என்று, தி. மு. கழகத் தோழர்கள் அனைவருக்கும் அன்பழைப்பு அனுப்பி, இதை முடிக்கிறோம்.

போலீஸ் கண்காணிப்பில் 'இந் நாட்டு மன்னர்கள்'

சென்னை, அக். 30—

நகரில் அலைந்து திரியும் எண்ணற்ற பிச்சைக்காரர்களுக்கு வாழ்வகை செய்ய புதியதொரு திட்டத்தை போலீசார் முடிவு செய்து சர்க்காருக்கு அனுப்பிவிட்டனர்.

நகரில் உள்ள பிச்சைக்காரர்களை நகருக்கு 16மைல் தொலைவிலுள்ள மேல்பாக்கம் என்னும் இடத்திலும், சென்னை ஜார்ஜ் டவுனிலுள்ள கோஷாலா என்னும் இடத்திலும் உள்ள முகாம்களில், குடியேற்ற தீர்மானிக்கப்பட்டது.

மேல்பாக்கத்தில் உள்ள முகாமில் 500 முதல் 1000 பேர் வசிக்கலாம்; கோஷாலா முகாமிலும் 600 பேர் இருக்க வசதியுள்ளது. இந்த இரண்டு முகாமிலும் 1000 பிச்சைக்காரர்களைக் குடியேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிகளைக் கவனித்துக் கொள்ள போலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

இந்தியாவிலிருந்து வரும் பல புத்தகங்கள், சஞ்சிகைகள் கென்யாவிற்குள் வரலாகாது என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவை, சதிக்குத் தூண்டிவிடும் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டவையாம். தடை செய்யப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகளின் பெயர்கள் தெரியவில்லை.

பொள்ளாச்சி மாநாட்டுக்கு வாழ்த்து

பழங்குடி மக்களின் ஊழியர்கள் கலக்காத குறை!

அன்புடையீர்,

பொள்ளாச்சி தாலுக்கா பழங்குடி மக்களின் முதல் மாநாடு நடைபெறுவது கண்டு மகிழ்கிறேன். பழங்குடி மக்களின் வாழ்வு எல்லாத் துறையிலும் வளம் பெறவேண்டும் என விழைபவர்களில் நானும் ஒருவன் என்பதோடு, எனக்கு வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் அதற்காக என்னால் ஆன பணியும் புரிந்திருக்கிறேன் என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

மாநாடு, வெற்றி பெற வேண்டும் என்று பல்லாண்டு கூறுவதற்கு முன், மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டிய பழங்குடி மக்களின் உண்மை ஊழியர்களில் பலர், மாநாட்டில் இடம் பெறாதது கண்டு ஆச்சரியப் படுகிறேன் என்பதைக் கூறாமல் இருக்க முடியவில்லை. மாநாடு வெற்றி பெறட்டும்.

வணக்கம்

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

டாக்கா இந்திய அலுவலகத்தில் போலீஸ் பாதுகாப்பு

கல்கத்தா குண்டுவீச்சின் எதிரொலி!

கல்கத்தா, அக் 30—

பாக். டெப்டி கமிஷனரின் காரியாலயத்தின்மீது குண்டுகள் வீசிய சம்பவத்தை முன்னிட்டு டாக்காவிலுள்ள இந்திய டெபுடி கமிஷனரின் காரியாலயத்தில் முன் ஜாக்கிரதை நடவடிக்கையாக பிரத்தியேக போலீஸ் பாரா போடப்பட்டிருக்கிறது.

கிழ் வங்க அரசாங்கத்தின் பிரதம செயலாளர் டெலிபோன் மூலம் கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் கமிஷனருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் டெபுடி கமிஷனர் அலுவலகத்தின் இரண்டாம் மாடி சுவரிலிருந்து இன்று இன்னொரு குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. கட்டடத்தின் மீதும், கார் மீதும் எறியப்பட்ட குண்டுகள் ஸ்டென்கன் குண்டுகள் என்று நிச்சயிக்கப்பட்டது. இதுவரை யாரும் கண்டுபிடிக்கப்படவில்லை

சென்னை மாவட்ட தி.மு. கழக கிளைக் கழகங்கட்கு

★

தலைமை நிலையத்தின் அறிக்கைப்படி சென்னை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக் கழகமும், நவம்பர் 1-ம் தேதி முதல் 8-ம் தேதி வரையில் 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நவ. 1 முதல் 8ம் தேதி வரையுள்ள நாட்களில் ஏதாவதொரு நாளில் ஒவ்வொரு கிளைக் கழகமும் அவசியம் ஒரு பொதுக்கூட்டம் போட்டு (செயற் குழு கூட்டியாவது) தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யக் கோரி தீர்மானங்களும், கையெழுத்து மனுக்களும் சென்னை முதலமைச்சர் ஆச்சாரியாருக்கும், தி. மு. கழகத் தலைமை நிலையத்திற்கும் அனுப்பி வைக்கவும்.

கூட்டத்தில் உண்டியல் வசூல் செய்து, தூத்துக்குடி வழக்கு நிதிக்குத் தங்களாலான தொகையை அனுப்பி உதவ வேண்டுகிறேன்.

'தூத்துக்குடி வாரம்' கொண்டாடும் ஒவ்வொரு கிளைக் கழகமும் கூட்டம் போடும் நாள், தலைவர், பேச்சாளர்கள், இடம் ஆகியவைகளை முன்கூட்டியே மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இந்த வேண்டுகோளை, தி. மு. கழகத்தைச் சார்ந்த படிப்பகங்கள், நூல் நிலையங்கள், மன்றங்கள் ஆகியவைகளும் நிறைவேற்றி வைத்தால் அது பெருமையும், மகிழ்ச்சியும் கொள்ளத்தக்கதாகும்," என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

பணிபுரியப் போனவர்கள் பிணமானார்கள்

கௌஹாத்தி, அக். 29—

வடகிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள அபார்மலைக் குன்றுப் பகுதியில் வாழும் மலை ஜாதியினரிடையே நல்லெண்ண சுற்றுப் பிரயாணம் செய்துவந்த அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் அந்த ஜாதியினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் என தகவல் கிடைத்திருக்கிறது.

இந்தத் தகவல் கிடைத்ததும் நிவாரணப் படையொன்று நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு விரைந்தது.

தூத்துக்குடி வழக்கு நிதி

★

முன் தொடர்ச்சி ரூ.	1281—4—4
அவிநாசி டி. கே. வாள்பாரன்	8—8—0
பாலமேடு தி. மு. கழகம்	10—0—0
பம்பாய்—பரண்டேப் தி. மு. கழகத் தோழர்கள் தோழர் கே. எஸ். அய்யா மூலம்	15—0—0
போடிநாயக்கனூர் 11-வது வார்டு தி. மு. கழக இளைஞர் சார்பில், ஏ. தியாகராசன் மூலம்	5—0—0
வெள்ளக்கட்டை தி. மு. கழகம்	5—0—0
,, பி டி. முத்துசாமி	2—0—0
பா. கா. புதூர் தி. மு கழகம்	2—8—0
கொழும்பு—11 எஸ். சிவபெருமாள்	2—0—0
,, எஸ் போத்திக்கண்	2—0—0
,, எம் பி. பெரியசாமி	2—0—0
,, ஆ சுயம்புலிங்கம்	2—0—0
,, எஸ். வி. செம்பலிங்கம்	2—0—0
,, எஸ். கே சுந்தரராஜ்	1—8—0
,, எஸ். பி. சுப்பையா	1—8—0
,, ஈ. சுயம்புலிங்கம்	1—8—0
,, கே. சுப்பையா	1—8—0
,, எஸ். முத்து	1—8—0
,, பி. இசக்கிமுத்து	1—8—0
,, எல். மாடசாமி	1—8—0
,, எஸ். டேவிட்	2—8—0
,, எம் ஏ. செல்லையா	1—0—0
சென்னை 39-வது வட்டம் கட்டிடத் தொழிலாளர்கள் சார்பில் தோழர் சி. என். நரசிமமம் மூலம்	3—6—0
தம்பனூர்—திருவனந்தபுரம் கே. சுப்பராயலு	2—0—0
திருப்பத்தூர் (ராமநாதபுரம் மாவட்டம்) தி. மு. கழக பொதுக்கூட்ட வசூல், தோழியர் அருண்மொழி மூலம்	10—0—0
கடலூர் (தெ. ஆ) தி மு. கழகக் கூட்ட வசூல் தோழியர் அருண்மொழி மூலம்	6—0—0
அரிசிப்பாளையம்—சேலம் கே வன்னியப்பெருமாள்	5—0—0
சென்னை 21—வண்ணை தியாகராயர் படிப்பகம் மன்றம்	15—0—0
மதுரை எஸ். சீனி மகம்மது	2—0—0
மதுரை அ. சி. கந்தசாமி	1—0—0
தெற்கிருப்பு அண்ணா படிப்பகம் எஸ். ஏ. துரை மூலம்	2—2—0
பழைய ஆயக்குடி சி. அன்புப்பழம்	1—0—0
திண்டுக்கல் தி. மு. கழக பொதுக்கூட்ட வசூல்— தோழர் ஏ. வி பி. ஆசைத்தம்பி மூலம்	3—7—0
தூத்துக்குடி டி. ஆசீர்	1—0—0
,, முத்துகிருஷ்ணன்	1—0—0
,, ஏ இசக்கி	1—0—0
,, சம்மனசு	1—0—0
,, மி. மி. அந்தோணிபிச்சை	1—0—0
,, மீ ஆரோக்கியசாமி	1—0—0
,, ஞானப்பிரகாசம்	1—0—0
,, சுப்பையா	1—0—0
,, எம். செல்லையா	1—0—0
,, ஆர் முனியசாமி	1—0—0
,, முத்துசாமி, சேசுமணி, வேலு, மாரியப்பன், ஊத்தர், பால்பாண்டி, எம். ஏ. முத்து, ஜார்ஜ் ஆகியோர்	4—0—0
தூத்துக்குடி முத்தாலைத தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைத் தொழிலாளர்கள் :—	
ஏ ராயப்பன்	1—0—0
வி. திருப்பதி	1—0—0
பி. பொன்னுசாமி	1—0—0
ஆர். பீடர்குழந்தை	1—0—0
எஸ். கணபதி	1—0—0
சி. அருணாசலம்	1—0—0
எஸ். காசி	1—0—0
பி அரிகிருஷ்ணன்	1—0—0
சென்னை—அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலையத்தார்	8—0—0
வாள்பாறை சென்னை மாகாண தோட்டத் தொழிலாளர் சங்கம், தலைவர் ஜே. பி. ஜெபக்கனி மூலம்	50—0—0
சென்னை வண்ணாரப்பேட்டை எஸ். ஆர். பழனிச்சாமி	3—0—0
தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் மூலம் :	
கீழ்விஷாரம் தி. மு. கழகம் பொதுக்கூட்ட வசூல்	1—5—0
திருவண்ணாமலை தி மு கழக கூட்ட வசூல்	9—6—6
வளவனூர்—குமாரகுப்பம் கூட்ட வசூல்	8—4—3
எடப்பாளையம் திருவள்ளுவர் கழகம்	2—0—0
ஆகமொத்தம் ரூ	1508—3—1

பீகாருக்கு மத்திய சர்க்கார் ரூ. $3\frac{1}{2}$ கோடி மானியம்!

ஐந்தாண்டு திட்டத்தின் பயனாகக் கொடுக்கப்படுகிறது

பாட்னா, அக். 30—

ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிப்பிட்டுள்ளபடி விவசாய முன்னேற்றத்திற்காக, யூனியன் சர்க்கார் ரூபாய் மூன்றரை கோடியை, பீகார் மாநில சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறது.

இத்தொகையைக்கொண்டு, உணவு தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் சிறிய பெரிய நீர் தேக்கங்களை நிர்மாணிக்க, இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்குள் செலவிட வேண்டும் என்று யூனியன் சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதனால், மேலும் 4 லட்ச ஏக்கராக்களை நஞ்சை பூமியாக மாற்றமுடியும் என்றும், ...

★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

காஞ்சீபுரம்:

பிள்ளையார்பாளையம்
(புதுப்பாளையத் தெரு)
1—11—53 ஞாயிறு மாலை
பேசுவோர் :
காஞ்சி-கல்யாணசுந்தரம்
முகவை-சௌந்தரபாண்டியன்

★

சிவகங்கை:

3—11—53 சேவ்வாய் மாலை
தலைவர் :
க. இரா. சக்தியேந்திரன் பி. ஏ, பி. எல்.
பேசுவோர் :
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
மதுரை-எஸ். முத்து
கோ. மணவாளன்
நச்சினார்க்கினியன்

★

தேனீ:

4—11—53 புதன் மாலை
தலைவர் : எம். எம். மேத்தா
பேசுவோர் :
ஏ. கோவிந்தசாமி எம் எல். ஏ.
பி. சமதர்மம் எம். சி.

★★★★★★★★★★★

"தூத்துக்குடி நாள்" கூட்டம்

1—11—53 ஞாயிறு காலை 9 மணிக்கு, சென்னை மீர்சாகிப்பேட்டை வள்ளிவர் வாசக சாலைக் கட்டிடத்தில், 43-வது வட்ட தி மு. கழகச் சார்பில் தோழர் இளம்பரிதி தலைமையில், "தூத்துக்குடி சதி வழக்கில் நமது கடமை" என்னும் பொருள் பற்றி பலர் பேசுவார்கள்.

★

செங்குன்றம் தி. மு. கழக தோழர்களுக்கு!

1—11—53 ஞாயிறு அன்று காலை 9 மணியளவில் கழகப் பணிமனையில், புதிய செயற்குழு தேர்தல் நடத்தவேண்டியிருப்பதால், கிளைக் கழக அங்கத்தினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு, தவறாது வரவேண்டுமாய் தோழர் ஜெகந்நாதன் கேட்டுக்கொள்கிறார்.

★

பம்பாய் தோழர்களுக்கு!

விரைவில் பம்பாயில் நடக்கவிருக்கும் தி. மு. கழக முதல் மாநாட்டிற்குத் தொண்டர் படையில் சேர விரும்புவோர், கீழ்க்காணும் முகவரியில், தங்கள் பெயரைத் தொண்டர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம் என, தோழர்கள் மாரியப்பனும், கண்ணதாசனும் அறிவிக்கின்றனர்.

முகவரி:—26, தோல் பசார், தாராவி, பம்பாய்—17.

21,000 டன் சர்க்கரை

புதுடில்லி, அக். 31—

இந்திய சர்க்கரை ஆலைகள் 1952—53 ஆண்டு உற்பத்தியிலிருந்து இதுவரை விற்பனைக்கு விடுவிக்கப்படாமல் கையிருப்பில் உள்ள சுமார் 21,000 டன் சர்க்கரையை பகிரங்க மார்க்கெட்டில் விற்பனை செய்வதற்காக, இந்திய சர்க்கார் இப்பொழுது விடுத்துள்ளனர்.

80,000 டன் தானியம் மொத்தத்தில் விளையக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரயில் நிறுத்த அறப்போர் எதிரொலி

ரிமாண்ட் 15-நாள்! வாய்தா 14! தண்டனை வாரம் 6!

22 குடியேற்றம் தோழர்கள் சிறை புகுந்தனர்

குடியேற்றம், அக். 31—

14 வாய்தாவிற்குப் பிறகும், 15 நாள் ரிமாண்டுக்குப் பிறகும், 22 குடியேற்றம் தோழர்களுக்கு 6 வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தோழர்கள் 22 பேரும், முகமலர்ச்சியுடன் தண்டனையை ஏற்றுச் சிறை புகுந்தனர்.

ரயில் நிறுத்த அறப்போரில் கலந்து கொண்ட குடியேற்றம் தோழர்களில் 22 பேர்களின் வழக்கு 29-10-53-ல், குடியேற்றம் சப் - மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தீர்ப்புக் கூறப்பட்டது.

14-வது வாய்தாவில், 15 நாள் ரிமாண்டுக்குப் பிறகு ஆறுவாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

தோழர்கள் 22 பேரும் முகமலர்ச்சியுடன் தண்டனையை ஏற்றுச் சிறை புகுந்தனர்.

சிறை புகுந்த தோழர்கள் :— சிவாகன், இரங்கசாமி, தி. சுப்ரமணியம், பொன்னரசன், கண்ணன், கே. பி. எம். மணி, ராமலிங்கம், பொன்னுசாமி, ராமன், சீனிவாசன், வேணுகோபால், கிருஷ்ணன், மகாலிங்கம், மோகன், மார்கன், ரகுபதி, கோவிந்தராஜு, ஆதிமூலம், வேலாயுதம், தசரராமன், ஈஸ்வரன், பாலகிருஷ்ணன்.

அரக்கோணம் தோழர்கள் வழக்கு:

12-வது வாய்தாவிற்குப் பிறகும் ஒத்திவைப்பு

அரக்கோணம், அக். 28—

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக வ. ஆ. மாவட்ட செயலாளர் ஏ. எஸ். சி. கிருட்டிணசாமி உள்பட 22 பேர் மீது இருந்துவரும் வழக்கு இன்று அரக்கோணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது போலீஸ் தரப்பினர் வராததால் மீண்டும் 10-11-53-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது 13-வது வாய்தாவாகும். இந்த வழக்கிற்கு, பூந்தமல்லியிலிருந்தும், திருத்தணியிலிருந்தும் கால் நடைதாகவும், சிலர் 90 மைல் தூரத்திலிருந்து சைகிளிலும் வந்து, செல்கின்றனர்.

இவர்களுடன் சென்ற மற்றொரு குழுவினரை, கடந்த வாரம விசாரித்து 6 வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★

'அனுவிருஷ்டி— அனாவிருஷ்டி'

இத்தாலி, யூகோ இடையில் தகராறுகளைக் கிளப்பிக் கொண்டிருக்கும் 'டிரீஸ்டி' போன்ற இடப் பெயரல்ல; அதிக மழை பெய்து வருவது பற்றி குறிப்பிட்டுள்ள செய்திக்கு தலைப்பு கொடுத்துள்ள 'சுதேசமித்திரனின்' தமிழ் (!) சிருஷ்டி.

★★★★★★★★★★★

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

25—10—53 ஞாயிறு பகல் 12 மணிக்கு திருபெரும்புதூர் வட்டம் ஓரகடம் என்ற ஊரில் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது அதுபோது, தோழர் தனசேகரன் என்பவர், புதிய கல்வித் திட்ட மறியலில் மன்னிப்பு எழுதிக் கொடுத்ததற்கு அவரை ஓராண்டு காலத்திற்கு இயக்கத்தை விட்டு நீக்கியும், தி.மு.கழகப் போராட்டங்களில் பங்கேற்றவர்களைப் பாராட்டியும், உயிர் நீத்தோருக்கு அனுதாபம் தெரிவித்தும், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தி. மு. கழகத் தலைவர்களை அரசியலார் சிறைபடுத்தி விருப்பதைக் கண்டித்தும், புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்தும், கல்லக்குடி, தூத்துக்குடியில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்குப் பொருளுதவி தர அரசியலாரைக் கோரியும், தென்னாட்டு மக்களின் கிளர்ச்சியை, 'காட்டுமிராண்டிகள் செயல்,' என்று நேரு கூறியதை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கொரியா மாநாடு

இந்தியாவுக்குப் பார்வையாளர் ஸ்தானம்

வாஷிங்டன், அக். 29—

"கொரியா அரசியல் மாநாட்டில் இந்தியா பங்குகொண்டு, போர்க் கைதிகள் பற்றிய எந்த விவாதத்திலாவது கலந்து கொள்வதற்கு அமெரிக்கா சம்மதிக்குமா என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை," என்று அயல் நாட்டிலாகா தெரிவித்தது.

கொரியா மாநாட்டிற்குப் போகும் ஐ நா. தூதுகோஷ்டியில், இந்தியாவுக்கு ஒரு இடம் அளிக்கப்படாவிட்டாலும், இப்போது, போர்க் கைதிகள் நடுநிலைமைக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் இந்தியாவை அரசியல் மாநாட்டிற்கு ஒரு பார்வையாளராக அனுமதிக்கக் கூடுமென்றும் போர்க் கைதிகள்பற்றி இந்தியப் பிரதிநிதிகளிடம் பல விஷயங்கள் விசாரிக்கப்படும் என்றும் வெளியாகியுள்ள செய்திகள் பற்றி அமெரிக்க வெளிநாட்டிலாகா இன்றைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

அகதிகளுக்குப் புகலிடம்

கௌஹாத்தி, அக். 30—

கிழக்கு வங்காளத்திலிருந்து வந்துள்ள 2000க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அஸ்ஸாமில் ஒன்பது இடங்களில் புகலிடம் அளிக்கப்பட்டு, நிவாரணம் தரப்படும். இதற்கு ரூ. 17 லட்சம் செலவாகும். அகதிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக, மத்திய சர்க்கார், ரூ. 28 லட்சத்திற்கு மேல் அஸ்ஸாம் சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறது.

ரூ. 50 கோடி முதலீடு செய்துள்ள நிஜாமுக்கு ரூ. 50 லட்சம் மானியமாம்!

பண்டிதரின் சுற்றறிக்கை 'பக்குவப்பட'க் காணோம்!

புதுடில்லி, அக். 31—

மன்னர்கள் தங்கள் மானியத்தைத் தாங்களாகவே குறைத்துக்கொள்ள வேண்டுமென்று பண்டித நேரு அனுப்பிய சுற்றறிக்கைக்குப் போதுமான ஆதரவு இன்னும் கிடைக்கவில்லை என்று இந்திய சர்க்கார் உயர்தர அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதுவரை சில மன்னர்கள் மட்டும் கடிதம் அனுப்பியிருப்பதாகவும், பெரிய மன்னர்களிடமிருந்து ஒரு கடிதம்கூட வரவில்லையென்றும் சொன்னார்.

நிலைமையை சர்க்கார் கவனித்து வருகிறதென்றும், சில மன்னர்கள் தங்களுக்குள் கலந்தாலோசித்து வருவதையும் கவனித்து வருகிறது என்றும் இந்த அதிகாரி கூறினார்.

அரசர்களின் மானியங்களுக்கும் வருமான வரி விதிக்க அரசியல் சட்டத்தைத் திருத்தப் பார்லிமெண்டால் முடியுமென்றும், காலப் போக்கை அனுசரித்து மன்னர்கள் நடந்துகொள்வார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது என்றும் அவர் கூறினார்.

ஆண்டுக்கு ரூ. 580 லட்சம் மானியம் பெறும் சுமார் 600 முன்னாள் மன்னர்களில், 284 பேர்கள்தான் பெருத்த அளவில் மானியம் பெறுகிறார்கள்; 104 பேர்கள், ஆண்டில் லட்சம் ரூபாய்க்கு மேல் பெறுகின்றனர்; இவர்கள், மானியத்தில் ஒரு பகுதியைக் கொடுத்துவிடலாம். இந்த 104 பேர்களுக்குத்தான் நேருவின் சுற்றறிக்கை அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

நிஜாமுக்கு, ஆண்டுக்கு 50 லட்சம் மானியம் கொடுப்பது முதல், சௌராஷ்டிராவில் கட்டோடியா மகாராஜாவுக்கு ரூ. 192 கொடுப்பது வரையிலும் பலவிதமாக மானியம் இருக்கிறது.

முன்னாள் மன்னர்கள் வர்த்தகத் துறையில் முதலீடு செய்திருப்பது பற்றி சரியான விவரங்கள் கிடைக்கவில்லை நிஜாம் மட்டும், வர்த்தகத் துறையில் ரூ. 50 கோடி முதலீடு செய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவருக்கு அடுத்தபடி குவாலியர் மகாராஜா நிறைய முதலீடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

ராஜப் பிரமுகர்களை எடுத்துவிட்டு, மாற்றம் செய்யக் கூடிய கவர்னர்களை நியமிக்கலாமா வென்றும் சர்க்கார் யோசித்து வருகிறது.

வந்துவிட்டன!

கல்கத்தா, அக். 31—

இந்தியாவில் உபயோகிக்கப் படவிருக்கும் முதல் மூன்று ஹெலிகாப்டர்கள் பம்பாய்க்கு வந்து சேர்ந்துவிட்டன அவை கல்கத்தாவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

மனிதர்கள் செல்ல முடியாத காட்டுப் பிரதேசங்களுக்கு ஆட்களையும் பொருள்களையும் கொண்டு செல்லும் மூன்று ஹெலிகாப்டர்கள் இந்தியா வந்து சேர்ந்துவிட்டன. இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்கவும் அவை உபயோகப்படுத்தப்படும்.

"முன்கோபி"

நியூயார்க், அக். 30—

ஆகாகான் மகன் அலிகான், உலகத்திலுள்ள முன்கோபிகளுள் ஒருவர் என்று ஹாலிவுட் நடிகை ஒருவர் பட்டம் சூட்டியிருக்கிறார்.

உங்களுக்கு தெரியுமா?

சென்னை, அக். 31—

சென்னை மாநிலத்தில், (ஆந்திரா நீங்கலாக) மட்டும் 30,000 கோவில்கள் இருக்கின்றன இவைகளில், 1000-க்கு மேற்பட்ட கோவில்கள், ஆண்டில், ரூ. 10,000-க்கு மேல் வரும்படி கிடைக்கக்கூடியவைகள்.

இக்கோயில்களில், 5-ல் ஒரு பாகம் தஞ்சாவூர் ஜில்லாவில்தான் உள்ளது; திருவாவடுதுறை, தருமபுரம் ஆதீனங்களிலுள்ள கோயில்களும், இந்த ஜில்லாவில்தான் உள்ளன.

சென்னை மாநிலத்திலுள்ள இந்தக் கோவில்களைப் பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும் புதைபொருள் இலாகாவில் சில என்ஜினியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் பற்றி சென்னை சர்க்கார் யோசித்து வருகிறது. இந்தப் பயிற்சியை அளிக்கவும், அவசியமான திட்டங்களை வகுக்கவும், உதவி, வசதி ஆகியவைகளைக் கோரி, சென்னை சர்க்கார், மத்திய சர்க்காருக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

புடவை மோகம்!

ஆங்கில நடிகையின் உற்சாகம்

லண்டன், அக். 31—

யுத்தத்திற்குப் பின், காதலன் ஒருவன், தன் காதலிக்கு வாங்கித் தரும் பொருள், பிரிட்டனில், இப்போது புடவைகள்தானாம்.

இந்திய மாதர்கள் புடவை கட்டிக் கொள்வது போல கட்டிக்கொள்ள பிரிட்டிஷ் யுவதிகளுக்குத் தயக்கம் இருப்பதற்குக் காரணம், அவை எங்கே அவிழ்ந்து விடப் போகிறதோ என்பதுதான். புடவை கட்டினால், இடுப்பில், அவிழ்ந்து விடாமல் எப்படி நிற்கும் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

புடவையைக் கட்டினால், அவிழவே அவிழாது என்று புரிய வைத்த பின்புதான் அவர்கள் புடவையை வாங்குகிறார்கள்.

பிரபல சினிமா நடிகை விவியன் லீ, 2,0000 பவுன் பெறுமான புடவைகளை வாங்கியிருக்கிறார்.

மனிதனின் உழைப்பு மறைந்து விட்டது!

லண்டன், அக். 30—

லண்டனில், மிகச் சிறிய தொழிற் சங்கங்கள் கொண்ட கோழிகள் இறகு பிடுங்குவோர் சங்கம், இயந்திர யுகத்தை எதிர்த்து போராட்டம் நடத்தி வருகிறது.

கோழிக் குஞ்சுகளின் இறகுகளைப் பிடுங்க ஒரு வியாபாரி இயந்திரங்கள் வைத்தார் என்று அங்கு வேலை பார்த்த சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்தனர். இவர்களுக்குச் சங்கம் ஆதரவு அளித்து வருகிறது.

இயந்திர மூலம் இறகு பிடுங்குவது சுகாதாரமானது என்று வியாபாரி கூறுகிறார். மேலும் இந்த இயந்திரம், ஒரு மணி நேரத்தில் 120 கோழிகளுக்கு இறகு பிடுங்குவதோடு, சுத்தமும் செய்து வருகிறது. ஒரு மனிதர் நாள் பூராவும் 200 கோழிகளுக்குத்தான் இறகு பிடுங்க முடியும். அவர் சுத்தம் செய்வதும் இல்லை.

இந்திய சிறைகள் நிலைமை!

பாதுகாப்பு அரண்களாகத் தோன்றுகிறதென குற்றச்சாட்டு

லட்சுமணபுரி, அக். 31—

இந்தியாவின் சிறைகள் நிர்வாகம்பற்றி ஐ. நா. வெளியிட்டுள்ள அறிக்கையில், நீண்டகால சிறை தண்டனைகள் விதிக்கப்படுவதைக் கண்டித்துள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரித்த நிபுணர், "இந்திய சிறைகள் பாதுகாப்பு அரண்களாகத்தான் இருக்கின்றனவே யொழிய, சமூக சீர்திருத்த நிலையங்களாக இல்லை," என்று குறிப்பிட்டுள்ளார்.

சிறை சீர்திருத்தங்கள் ஏதோ சில இடங்களில் மட்டும்தான் நடந்துவருகின்றன. எல்லா சீர்திருத்தங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சிறையும் சீர்செய்யப்பட்டால் இந்திய சிறைகள் மெச்சத்தக்க வகையில் இருக்கும் என்று கூறியுள்ளார்.

"சிறை நிர்வாகம் ஊழல், கொடுமைகள் மிகுந்து இருக்கும் இடம்," என்று சர்க்காரும், பொதுமக்களும் கருதுவது வருந்தத்தக்கது என்றும், சர்க்காரிலும், சிறை நிர்வாகத்திற்குக் கடைசியாகத்தான் கவனம் செலுத்தப்படுகிறது என்றும் கூறுகிறார்.

சிறைத் தண்டனை அளிப்பதற்குப் பதிலாக, நன்னடத்தை ஜாமீனில் விடுவது பற்றி மிக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

விடுதலையான கைதிகளைப் பராமரிக்கும் வேலையிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி, சிறைக்கு அதிகம் பேர்களை அனுப்புவதால் நன்மையைவிட தீங்குதான் அதிகமாகுமென்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

சென்னை, அக். 28—

31—10—53 அன்று மாலை 5 மணிக்கு, டாக்டர் தருமாம்பாள் தலைமையின்கீழ் புலவர் நன்னன் அவர்களால் குறள் வகுப்பு துவக்கப்படும். இது தொடர்ந்தாற்போல் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்.

கருணாநிதி கலா மன்றக் கூட்டம்

ஈரோடு, அக். 27—

25—10—53-ல், தோழர் ம. க. மதிமாறன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் கல்லக்குடியில் உயிர் நீத்தவர்களுக்கு நாடகம் நடித்து பணம் திரட்டிக் கொடுப்பதென்றும், திரு. வி. க. மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

திருமணம்

வனவாசி, அக். 27—

26—10—53-ல், வனவாசி தி. மு. கழக அணைச் செயலாளர் தோழர் கா. பொன்னுசாமி அவர்களின் தம்பி தோழர் கா. பழனியப்பனுக்கும், தோழியர் ராசம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக வனவாசி தி. மு. கழகத்திற்கு ரூ. 5-ம், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1-ம் நன்கொடையாக மணமக்களால் அளிக்கப்பட்டது. இந்த ரூ 1 வரப்பெற்றோம். நன்றியுடையது —பொறுப்பாளர்.

தூத்துக்குடி வாரம்

தி. மு. கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

1. நவம்பர் முதல் வாரத்தில், (1-ந் தேதி முதல் 8-ந் தேதிக்குள்) ஒரு நாள், "தூத்துக்குடி நாள்" என்று ஒரு கூட்டம் அவசியம் நடத்த வேண்டும்.
2. அந்தக் கூட்டத்தில், தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. நிறைவேற்றிய தீர்மானத்தை, "கனம். இராசகோபாலாச்சாரியார், முதல் மந்திரி, அரசாங்க மாளிகை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—9," என்ற முகவரிக்கு உடனடியாகத் தபாலில் அனுப்பி, நகலை, தலைமை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.
4. அன்றைய கூட்டத்திலேயே, தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, தோழர்களை விடுதலை செய்யும்படி சென்னைப் பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்று தயாரித்து, அதில், நூற்றுக்கணக்கான கையெழுத்துக்களை வாங்கி, தனியாகப் பிரதம மந்திரி 'முகவரிக்கு' அனுப்பி, கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையை தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகக் கிளையும் கட்டாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

'அறிவகம்,' சென்னை, 23—10—53.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

மலைப் பிரதேசத்தில் எண்ணெய், நிலக்கரி

கௌஹாத்தி, அக். 30—

அஸ்ஸாம் மலைப் பிரதேசமான காரோ மலைகளில், எண்ணெய், நிலக்கரி கிடைக்கின்றனவாம். எண்ணெய்ப் பரிசீலனை வேலையில் அஸ்ஸாம் ஆயில் கம்பெனியும், ஸ்டாண்டர்டு வேகுவம் கம்பெனியும் கூட்டாக ஈடுபடும். இம்மலைப் பிரதேசத்தில் 100 கோடி டன் நிலக்கரி கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

மீன் பிடிக்க நிபுணர்கள்!

பம்பாய், அக். 30—

ஆழக் கடல் மீன் பிடி கப்பல்களான "அசோக்", "பிரதாப்" ஆகிய கப்பல்களைக் கொண்டு, மீன் பிடிப்பதற்கு ஆலோசனைகள் கூறுவதற்காக நான்கு ஜப்பானிய நிபுணர்கள் இங்கு வந்திருக்கின்றனர்.

இந்த நிபுணர்கள் கையாளும் புது முறைகளால் இரட்டிப்பு மடங்கு மீன் பிடிபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி. க. மன்றம் திறப்பு

லால்குடி, அக் 28—

18—10—53-ல், லால்குடி மேல வீதியில், மாணவர்களால் திரு. வி. க. மன்றம் என்ற பெயரில் பொது வாசகசாலை திறக்கப்பட்டு, தோழர்கள் ரா. பெருமாள் தலைவராகவும், லெக்கையர் உபதலைவராகவும், சின்னராசு பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், திரு. வி. க. மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

2000 ஆசிரியருக்கு வேலை

பம்பாய், அக். 29—

பம்பாய் அரசாங்கம் நவம்பர் 2-ந் தேதி முதல், உடனடியாக 2000 ஆரம்ப ஆசிரியர்களை நியமிக்க உத்தேசித்துள்ளது. படித்தோரிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவே இந்தப் புதிய ஏற்பாடு.

கையால் காகிதம்!

பம்பாய், அக். 30—

அகில இந்திய காதி, கிராமக் கைத்தொழில் போர்டு வகுத்துள்ள திட்டப்படி, அடுத்த ஆண்டில், ரூ 30 லட்சம் பெறுமான 1,200 டன் கையால் செய்யப்பட்ட காகிதம் உற்பத்தி செய்யப்படும். 200 உயர்தரப் பள்ளிகள் இதற்கெனப் பொறுக்கப்படும்.

கையால் காகிதம் செய்வதற்கு வேண்டிய சிறு இயந்திரங்கள், மூலப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள் ஆகியவைகளை வாங்குவதற்காக போர்டு ரூ. 16 லட்சம் கடனுதவி கொடுத்துதவும்.

காகித உற்பத்திக்கு நிபுணர் ஆலோசனைகளும், உற்பத்தியான வற்றை விற்கவும் வேண்டிய உதவிகளும் அளிக்கப்படும்.

விஞ்ஞானம் அங்கே விளையாடுகிறது!

அணு இயந்திரங்களைப் பரிட்சிக்க ஆயத்தமாகின்றனர்.

நியூயார்க், அக். 31—

225 அடிவட்டமுள்ள பிரம்மாண்டமான இரும்புக்குண்டு ஒன்று இங்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விட்டத்திற்குள் அணு ஆராய்ச்சி நிபுணர்கள், சப்மரீன்களை ஓட்டக்கூடிய அணு யந்திரத்தை பரிட்சிப்பார்கள்.

இந்த இரும்புப் பந்தைக் கட்ட பத்து மாதங்கள் பிடித்தன. குண்டு பூமியில் பாதி புதைக்கப்பட்டு, மேலே காங்கிரீட்டால் மூடப்படும். குண்டுக்குள்ளே இயந்திரத்தை வைத்து, கடலுக்குள் என்ன மாதிரியான நிலைமை ஏற்படுமோ அதை உண்டாக்கி, பரிட்சைகள் நடத்துவர்.

அணுக் கிரணங்கள் வெளியே தப்பி வராமல் பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்படித் தப்பினாலும் குண்டுக்கு வெளியே வர முடியாது.

உரேனியம் அணு தகர்க்கப்படும்போது உண்டாகும் சூட்டினால், சோடியம் என்ற திரவம் சூடாக்கப்படும்; இது, தண்ணீரை ஆவியாக்கப் பயன்படும்; இதனால், இயந்திரம் ஓட்டப்படும். சப்மரீன் இயந்திரம் இந்த அடிப்படையில்தான் கட்டப்படுகிறது.

நவீன சாதனங்கள் கொண்ட தொழிற்சாலை!

லண்டன், அக். 31—

பிரிட்டனின் டாங்கி உற்பத்தி தொழிற்சாலை, உலகிலேயே நவீன சாதனங்களைக் கொண்டதாகும் என்று கூறப்படுகிறது. லங்காஷயரில், லேலந்து என்ற இடத்தில், 100 ஏகரா நிலத்தில், 1,10,00,000 பவுன் செலவில் இது கட்டப்பட்டுள்ளது. யுத்தம் வந்தால் முழு சக்தியுடன் வேலை செய்யும் சக்தி வாய்ந்தது, இத்தொழிற்சாலை!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ... நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: ... அண்ணாதுரை, எம். ஏ.